

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2026) கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், கல்லடிவிளையில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ஆர். மகேஷ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஸ்டின், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஹெலன் டேவிட்சன், புத்தளம் பேரூர் செயலாளர் எஸ்.பிரதாப் சிங் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## சென்னை மாநகர புறநகர் மின்சார ரயில் ரத்து – தென்னக இரயில்வேயின் அலட்சியம்!

# மக்களின் போக்குவரத்துத் தேவைக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு பேருந்து சேவை!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிக்கை!

**சென்னை, பிப்.25–**

**புறநகர் மின்சார இரயில் ரத்து, தென்னக இரயில்வே அலட்சியத்தை காட்டுகிறது. கேட்காமலேயே அரசு பேருந்து சேவை வழங்கப்படுகிறது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் உள்ள ரயில் தண்டவாளங்கள் மற்றும் நடைமேடைகள் தென்னக ரயில்வே மூலம் சீரமைக்கும் பணி கடந்த பிப்ரவரி 20 அன்று முதல் மேற்கொள்ளப்பட இருப்பதாக முந்தைய நாளான பிப்ரவரி 19 அன்று திடீரென அறிவிப்பு வெளியானது. இது தொடர்பாக முறையான அறிவிப்பு தென்னக ரயில்வே இடமிருந்து மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்படவில்லை. இது குறித்து மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தென்னக ரயில்வேயை தொடர்பு கொண்ட பின்னரே மின்னஞ்சல் மூலம் விவரங்கள் பெறப்பட்டது.

இந்த திடீர் அறிவிப்பில் கூட்ட நெரிசல் நேரங்களில் (Peak Hours) ஐந்து நிமிடங்களுக்கு ஒரு புறநகர் மின்சார ரயில் சேவை என்பது 20 நிமிடங்களுக்கு ஒரு ரயில் இயக்கப்படும் என்ற நேர அட்டவணை மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நடைமுறையில் 30 நிமிட இடைவெளியில் மட்டுமே புறநகர் மின்சார ரயில் சேவை சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம், செங்கல்பட்டு இருமார்க்கங்களிலும் இயக்கப்பட்டு வருகிறது. இந்த குறைக்கப்பட்ட நேர அட்டவணை 20.02.2026 முதல் 05.04.2026 வரை கடைபிடிக்கப்படும் என தென்னக இரயில்வே அறிவித்துள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் ஆண்டு இறுதி தேர்வு மற்றும் பருவத்தேர்வுகள் ஆண்டு தோறும் மார்ச் மாதத்தில் நடைபெறுவது வழக்கம். இந்த காலகட்டத்தில் எவ்வித ஆலோசனையும் இன்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் கருத்தில் கொள்ளாமல் எழும்பூர் இரயில் நிலைய சீரமைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளினால் மாணவர்கள் ஆண்டு இறுதி தேர்விற்கான பயிற்சி மேற்கொள்ளவோ தேர்வினை உரித்த நேரத்தில் எழுதுவதற்கும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவார்கள்.

இருப்பினும், சென்னை மாநகரின் போக்குவரத்து தேவையினை பூர்த்தி செய்வதற்காக மாநகர் போக்குவரத்துக்கழகம் மூலம் ஏற்கனவே தடத்தில் இயக்கப்பட்டு வரும் 314 சேவைகளுடன் கூடுதலாக 60 சிறப்பு பேருந்துகள் இந்த வழித்தடங்களில் இயக்கப்படுகிறது. மேலும் இந்த கூடுதல் இணைப்பு பேருந்து சேவைகளின் மூலம், எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்து தலைமைச்செயலகம், எழிலகம், சென்ட்ரல், அரசு பொதும ருத்துவமனை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை கடற்கரை இரயில்நிலையம் முதலிய இடங்களுக்கு பயணிகள் தங்களது வேலை நிமித்தமாக பயணத்தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக திட்டமிட்டு இயக்கப்படுகிறது.

சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து பாதிப்பை இருபதாம் தேதி அன்றே மாநில அரசு கணித்து கூடுதல் பேருந்துகளை மாநகர் போக்குவரத்து கழகம் மூலம் இயக்கப்பட்டு ஓரளவு நிலைமை சீர் செய்யப்பட்டது. முன்னதாகவே தென்னக ரயில்வே மூலம் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு உரிய தகவல் அளித்திருந்தால் மற்றும் உரிய ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு இருந்தால் பயணிகள் பாதிக்காத வண்ணம் உரிய நடவடிக்கை கலந்தாலோசிக்கப் பட்டு எடுத்திருக்கலாம். புறநகர் இரயில் சேவைகள் இயக்கம் குறைக்கப்பட்ட தகவல் வெளியான உடன் மாநகர் போக்குவரத்துக் கழகம் மூலம் கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டது. இதன் பின்னர்தான் தென்னக ரயில்வே விழித்துக்கொண்டு பிப்ரவரி 24 ஆம் தேதி முதல் செங்கல்பட்டு, தாம்பரம் ஆகிய இரயில் நிலையங்களிலிருந்து புனித தோமையார் மலை மற்றும் எழும்பூர் வரை குறுகியதூர இடங்களுக்கு புறநகர் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

ஒவ்வொரு புறநகர் மின்சார ரயில் நிலையம் அருகே உள்ள பேருந்து நிறுத்தங்கள் மற்றும் நிலையங்களில் இருந்து தேவையான அளவு மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுவதால் ஒரே இடத்தில் பயணிகள் கூடி சிரமம் ஏற்படாத வண்ணம் உடனுக்குடன் அவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு உரித்த நேரத்தில் செல்கின்றனர். புறநகர் இரயில் பயணிகள் 3 மாத காலத்திற்கான மாதாந்திர பயண அட்டை பெற்றுள்ளதால் கூடுதல் பேருந்துகளில் உரிய பயணச்சீட்டு கட்டணம் செலுத்தி தங்களது இடங்களுக்கு செல்ல தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. இருப்பினும், மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து தேவை யினை அறிந்து சிறப்பான சேவையை எந்தவொரு இக்கட்டான காலங்களிலும் நாள்தோறும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இது குறித்து விவரங்கள் கேட்டறிந்து வருகிறார்கள். பயணிகளுக்கு சிரமம் இல்லாமல் பயணிக்க ஏற்பாடுகளை செய்ய அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சுதா தீனதயாளன் எம்.சி, தலைமை!

# திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் கழக மகளிர் நிர்வாகிகளுக்கு நல உதவிகள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. – திருமதி.பாரதி பாஸ்கர் வழங்குகின்றனர்!

சென்னை,பிப்.25-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு “மனிதநேய விழா 13”, மகளிர் உயர்வில் வேரானவர்! வழங்கும் மனதில் தாயானவர்! எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்டம் இன்று 25.2.2026, புதன்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, முதல்வர் திருமண மண்டபம், வால்டாக்ஸ் சாலை, நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதாதீன தயாளன் எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் திரு.தயாநிதிமாறன் எம்.பி, முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், சரிதாமகேஷ்குமார் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி. எம்.விஜயகுமார் எம்.சி, புனிதவதிஎத்திராசன் எம்.ச, டாக்டர்.ஜி.சாந்தகமார் எம்.சி, இராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, சாவித்திரிவீரராகவன் எம்.சி, ஆர்.கலைச்செல்வி, ஜி.வி. நாகவள்ளி, வி.சந்தான லட்சுமி, கே.சுனோபா, ஜெ.தேவி கிருபை, ஆர்கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலட்சுமி, ஏ.சுசிலா, கே.சாந்தி, வி.வளர்மதி, கே.ரத்தினம், கே.தனபாக்கியம், ச.ராதிகா, ஜி. காயத்ரி, ஆர்.அனிதா, ஆர். ராதா, எழில், இலக்கியா, தேன்மொழி, அன்னக்கிளி, ஏ.சித்ரா, எஸ்.மணிமேகலை, என்.ராஜகலா, டி.விமலா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் கழக மகளிர் நிர்வாகிகளுக்கு, நலத்திட்ட உதவிகளை - கழக துணைப் பொதுச்செயலாளர் திருமிகு. கனிமொழி கருணாநிதி எம்.பி, பட்டிமன்ற பேச்சாளர் திருமதி.பாரதி பாஸ்கர் ஆகியோர் வழங்கி சிறப்பிக்கின்றனர்

மேலும் இந்நலத்திட்ட விழாவில், அ.வெற்றிஅழகன், எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, கே.எஸ். இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, இரா.நரேந்திரன், பி.எம்.யாழினி. மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன் பி. கே.மூர்த்தி கே.சந்துரு சி. மகேஷ்குமார் எஸ்.மணிமுடி வே.உமாகாந்த் சங்கரிநாராயணன் என்.பி.எம்.ஷேக்அப்துல்லா கோ.ஏகப்பன் தேவஜவஹர் ஜி.மகாதேவன் இசட். ஆசாத் எம்.சி, மண்டலத் தலைவர்கள்: கூ.பி.ஜெயின் பகுதி செயலாளர்கள்: சொ. வேலு எம்.சி ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் வே. வாசு டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.டி.ஆர். நாகராஜ் வி.சுதாகர் பொதுக்குழு உறுப்பினர்கள்: ஜெ.துள சிங்கம் டி.வி.செம்மொழி, ரமேஷ் [எ]நீலகண்டன் எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா மாமன்ற உறுப்பினர்கள் வி.பரிமளம் ராஜேஷ்ஜெயின் எல்.தாஹா நவீன் எம்.தாவூத்பீலதா வாசு எல்.ரமணி எஸ்.தமிழ்ச்செல்வி டி.யோகபிரியா பி. அமுதா எஸ்.உமா சி.ஸ்ரீதனி என்.உஷாநாகராஜ் கே. பொற்கொடி மு.சரவணன் எம்.கமல் எம்.இ.சேகர்

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய் எஸ்.தனசேகர் ஜெ.பாலமுருகன் பா. ஜெகதீஷ் க.வினோத் ஜி. ஜெ.பிரபு ஆர்.டி.சங்கர்நானா மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: நா.துலுக்காணம் எம்.பெரோஸ்கான் கா.ராஜ்முகமது இரா.வீரமணி எல்.பி.எம்.மோகன் திரை கண்ணன் ஜி.தாமோதரன் பி.விஜயகுமார் எம்.விநாயகம் சு.பா.பிரதீப்குமார் நா. இரஞ்சித் விஜயாலயன் ஆர். எஸ்.சித்திக் ம.அசோக்குமார் க.கிருஷ்ணமூர்த்தி எஸ்.சம்பத்குமார் து.ஆயிரம் துறைமுகம் மேற்கு/கிழக்கு பகுதி நிர்வாகிகள்: மே.ஜனார்த்தனன் கே.ஆர்அபரஞ்சி மா. முத்துகுமார் ந.சுந்தரம் எஸ். சந்தியாகு செ.தமிழ்வாணன் சி.பா.ஜெயராமன் துறைமுகம் மேற்கு / கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் ம.ஜெய்சங்கர் பா.கதிரவன் ஆர்.ரவிச்சந்திரன் டி.சதீஷ்குமார் வே.பா.பிரபாகரன் எல். சத்தியநாராயணன் எஸ்.புகழேந்தி ஆர்.ஏ.அஸ்லாம் த. கதிரவன் [எ] ராஜா ம.பரத்குமார் கே.கவியரசு அ.நா. பார்த்திபன் மாவட்ட பிரதிநிதிகள் டி.எஸ்.சேகர் லண்டன்.க.முருகன் எல்.எழில்அரசு ஜி.மாசிலாமணி எம். நாராயணன் வி.எம்.முருகவேல் வி.அசோக்குமார் கே. ஆர்.மதன்குமார் பூக்கடை எம்.முரளி எம்.வி.ஆர்.சரவணக்குமார் ஏ.பி.எஸ்.செந்தில் குமார் வி.சங்கர் எம்.சுரேஷ் எஸ்.கதிர்வேலு சேகர் [எ] பிரஸ்சேகர் ஆர்.தங்கமணி ஏ.மதுசூதனன் பி.ஜி.சுகுமார் டி.சுபாஷ்சந்திரபோஸ் வீடியோ.கே.சம்பத் ஹாஜி முகமதுஅலி

மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள்: பா.மலர்கொடி வி.வளர்மதி கௌரி குருபரன் சாவித்திரி அன்பழகன் எஸ்.பிரீத்தி எஸ். ஜெயசூர்யா சூர்யா ரகு அமுல் பாண்டியன் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் : மகேஷ்வரி சாந்தி டில்லி பி.ஜெயந்தி பி.ஜலபூசனம் கே.லட்சுமி ஜான்சிராணி சகினாபேகம் எஸ்.லட்சுமி ஆர்.சாந்தி ஜூஜூ பிரியா பகுதி மகளிர் அணி அமைப்பாளர்கள் : எஸ்.சந்திரகலா எஸ்.வரலட்சுமி அனுசுயா பாண்டியன் பிரேமா தயாளன் சகிலா ஈஸ்வரி கண்ணன் எம்.புனிதா ஞானதீபம் டி.தமிழ்செல்வி தரணி சீனிவாசன் ஏ.சித்ரா மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை நன்றி கூறுகிறார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் சுதந்திரப் போராட்ட வீரர் குமரிக் கோமேதகம் ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் குமார், பிரின்ஸ், திருமதி தாரகை கத்பட், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், மாநகராட்சி மேயர் ஆர். மகேஷ், துணை மேயர் திருமதி மேரி பிரின்சி லதா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஸ்டின், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி ஹெலன் டேவிட்சன், மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், பொன்னப்ப நாடார் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.2.2026) கன்னியாகுமரியில், வாணியக்குடி விசைப்படகு உரிமையாளர் நலச் சங்கத்தின் தலைவர் ஜேம்ஸ், செயலாளர் குமார் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, வாணியக்குடி புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, விசைப்படகு மாதிரியை நினைவுப் பரிசாக வழங்கினார்கள். உடன் பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஸ்டின் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.2.2026) கன்னியாகுமரியில், கிறிஸ்துவ ஐக்கிய பேரவையின் தலைவர் ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ், செயலாளர் அருப்பணி எ. ஒய்சிலின் சேவியர், பொருளாளர் அருட்தந்தை ஜெ. வின்சென்ட் ராபர்ட், மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பேராயர்கள் சந்தித்து சிறுபான்மை மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதியாக நிலைநாட்டி, சமூகநீதியை அடிப்படையாகக் கொண்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதற்காக பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர். உடன் பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஸ்டின் ஆகியோர் உள்ளனர்.


